பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

16 09 2024 **MONDAY** **7.15 AM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முதல் கட்ட பிரச்சாரம் இன்று மாலையுடன் முடிவடைகிறது.

2. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொடர்பான சர்வதேச முதலீட்டு மாநாட்டை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று காந்தி நகரில் தொடங்கிவைக்கிறார்.

3. ராஜஸ்தான் மாநிலத்தில் ஏற்பட்ட சாலை விபத்தில் எட்டு பேர் உயிரிழந்தனர்.

4. **Yagi** புயலால் பாதிக்கப்பட்ட வியட்நாம், மியான்மர், லவோஸ் நாடுகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் இந்தியா நிவாரணப்பொருட்களை அனுப்பிவைத்துள்ளது.

5. செஸ் ஒலிம்பியாட் போட்டியில், இந்திய ஆடவர் அணி - அஜர்பைஜானுக்கு எதிரான ஆட்டத்தில் 3-1 என்ற கணக்கில் வெற்றிபெற்றது.

--- *இனி விரிவான செய்திகள்* ---

**<<<<<<<>>>>>>**

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முதல் கட்ட பிரச்சாரம் இன்று மாலையுடன் முடிவடைகிறது.

அங்கு மூன்று கட்டங்களாக தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், முதல்கட்டமாக 24 தொகுதிகளில் நாளை மறுநாள் நடைபெறவுள்ளது.

ஏழு மாவட்டங்களுக்கு உட்பட்ட அந்த தொகுதிகளில் அரசியல் கட்சித்தலைவர்கள் இறுதிக்கட்ட பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இரண்டாவது கட்டத்தேர்தல் இம்மாதம் 25-ஆம் தேதியும், மூன்றாவது மற்றும் இறுதிக்கட்ட தேர்தல் அடுத்த மாதம் ஒன்றாம் தேதியும் நடைபெறவுள்ளது.

ஜம்மு காஷ்மீரில் அரசியல் சாசனத்தின் 370-ஆவது பிரிவு நீக்கப்பட்ட பின்னர் நடைபெறும் முதல் தேர்தல் இதுவாகும்.

<<<<<<<>>>>>>

தரமான கல்வி வழங்குவதன் மூலம் நாடு மிக விரைவில் வளர்ந்த நாடாக மாறும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் கூறியுள்ளார்.

நாக்பூரில் உள்ள ஒரு கல்வி நிறுவனத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மக்களுக்கு கல்வியை வழங்குவதைவிட மிகப்பெரிய பரிசு எதுவும் இருக்க முடியாது என்று கூறினார்.

தரமான கல்வியே –தரமான ஜனநாயகத்தை வரையறுக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியா பின்தங்கிய நாடு அல்ல என்றும், மிக விரைவாக வளர்ச்சியடைந்து வரும் நாடு என்றும் இந்தியாவின் வளர்ச்சியை இனி எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது என்றும் அவர் கூறினார்.

பொருளாதார ரீதியாகவும் இந்தியா வளர்ந்து வருவதாகவும், உலகில் முதலீட்டு வாய்ப்புக்களுக்கான சிறந்த நாடாக இந்தியா விளங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

பல்வேறு நாடுகளுக்கு முன்மாதிரியாக இந்தியா திகழ்வதாக உலக வங்கி பாராட்டியுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

டிஜிட்டல் மயமாக்கத்தால் விவசாயிகள் உட்பட மத்திய அரசின் நலத்திட்டங்கள் பயனாளிகளுக்கு நேரடியாக சென்றடைகிறது என்றும் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, குஜராத் மாநிலம் காந்தி நகரில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொடர்பான சர்வதேச முதலீட்டு மாநாட்டையும், கண்காட்சியையும் இன்று தொடங்கிவைக்கிறார்.

மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ள இந்த மூன்று நாள் மாநாட்டில், பசுமை எரிசக்திக்கான முதலீடு, எதிர்கால எரிசக்தி தேவைகளுக்கான தீர்வுகள், உள்ளிட்டவை தொடர்பாக 40 அமர்வுகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

140 நாடுகளிலிருந்து 25 ஆயிரத்திற்கும் அதிகமான பிரதிநிதிகள் இதில் கலந்துகொள்கிறார்கள்.

ஜெர்மனி, ஆஸ்திரேலியா, டென்மார்க், நார்வே உள்ளிட்ட நாடுகள் இந்தியாவுடன் இணைந்து இந்த மாநாட்டை நடத்துகின்றன.

மாநாட்டையொட்டி நடைபெறவுள்ள சர்வதேச கண்காட்சியில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொடர்பாக நவீன தொழில்நுட்பங்களை அரசு மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் காட்சிப்படுத்த உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி, குஜராத் முதலமைச்சர் திரு பூபேந்திர பட்டேல் ஆகியோர் துவக்க நிகழ்ச்சியில் கலந்துகொள்கிறார்கள்.

இந்த நிகழ்ச்சிக்கு பின்னர் பிரதமர் அகமதாபாத் - பூஜ் இடையிலான வந்தேபாரத் ரயில் சேவையை தொடங்கிவைக்கிறார்.

மேலும், எட்டாயிரம் கோடி ரூபாய மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளையும் தொடங்கிவைப்பதோடு, அரசு நலத்திட்டங்களில் பயனடைந்த பயனாளிகளுடன் கலந்துரையாடவும் திட்டமிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

தூய்மை பாரத இயக்கத்தின் ஒரு பகுதியாக நாடு முழுவதும் நாளை முதல் அடுத்த மாதம் 2-ஆம் தேதிவரை தீவிர தூய்மைப்பணிகள் நடைபெறவுள்ளன.

சுற்றுலாத்தலங்கள், அரசு கட்டிடங்கள், வணிக வளாகங்கள், நீர்நிலைகள், பறவைகள் சரணாலயம், சமுதாய மற்றும் பொது கழிப்பிடங்கள் ஆகியவற்றில் மிகப்பெரிய அளவில் தூய்மைப்பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

மத்திய அரசின் அனைத்து அமைச்சகங்களும், மாநில அரசின் பல்வேறு துறைகளும் இணைந்து நாடு முழுவதும் இப்பணிகளை மேற்கொள்ள உள்ளன.

பொதுமக்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவன பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றையும் இணைத்து தூய்மைப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<<>>>>>>

**Yagi** புயலால் பாதிக்கப்பட்ட வியட்நாம், மியான்மர், லவோஸ் நாடுகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் இந்தியா நிவாரணப்பொருட்களை அனுப்பிவைத்துள்ளது.

இந்நாடுகளில் வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டுள்ளது.

மியான்மருக்கு உணவுப்பொருட்கள், துணி, மருந்து, உள்ளிட்ட பத்து டன் நிவாரணப்பொருட்கள் இந்திய கடற்படையின் சாத்புரா கப்பலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

போர்வைகள், கொசுவலைகள், ஜெனரேட்டர் கருவிகள், தண்ணீர் சுத்திகரிப்பு சாதனங்கள் உள்ளிட்டவற்றை இந்நாட்டிற்கு இந்தியா அனுப்பிவைத்துள்ளது.

வியட்நாமிற்கு 35 டன் நிவாரணப்பொருட்கள் இந்திய விமானப்படையின் விமானம் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தண்ணீர் சுத்திகரிப்பு சாதனங்கள், போர்வைகள் மற்றும் பாத்திரங்கள், சூரிய சக்தியில் இயங்கும் விளக்குகள் உள்ளிட்டவை நிவாரணப்பொருட்களில் அடங்கும்.

வாவோஸ் நாட்டிற்கு பத்து டன் நிவாரணப்பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத்துறை ஸ்டார்ட் அப் சூழலை வலுப்படுத்துவதை நோக்கமாக கொண்டு பாஸ்கர் என்ற டிஜிட்டல் தளத்தை தொடங்கியுள்ளது.

ஸ்டார்ட் அப் நிறுவனங்கள், முதலீட்டாளர்கள், வழிகாட்டிகள், சேவை வழங்குபவர்கள், அரசு நிறுவனங்கள் உள்ளிட்ட முக்கிய பங்குதாரர்கள் இடையே ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில் இந்த டிஜிட்டல் தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஸ்டார்ட் அப் துறையிலும் இந்தியாவை உலகில் முதன்மையான நாடாக மாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முன் முயற்சி இது என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<<>>>>>>

ராஜஸ்தான் மாநிலத்தில் நேற்றிரவு ஏற்பட்ட சாலை விபத்தில், எட்டு பேர் உயிரிழந்தனர். 18 பேர் காயமடைந்தனர்.

**Sirohi** மாவட்டத்தில் **Pindwara** என்ற இடத்தில் லாரியும், ஜீப்பும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதால், இந்த விபத்து நிகழ்ந்ததாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

அளவுக்கு அதிகமான மக்களை ஏற்றிச்சென்ற ஜீப் சாலையில் தவறான திசையில் சென்றதாக முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

காயமடைந்தவர்களுக்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு அனில் குமார் தெரிவித்தார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அம்மாநில முதலமைச்சர் திரு பஜன்லால் சர்மா ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

சத்தீஸ்கர் மாநிலம் சுக்மா மாவட்டத்தில் மாந்தீரிக செயல்களில் ஈடுபடுவதாக கூறி ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐந்து பேரை கிராம மக்கள் அடித்துக்கொன்றதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

முரளி குடா அருகே உள்ள **Itkala** என்ற கிராமத்தில் இந்த சம்பவம் நடைபெற்றதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்து அந்த கிராமத்திற்கு விரைந்து சென்ற காவல்துறையினர் குற்றவாளிகள் என்று சந்தேகிக்கப்படும் ஐந்து பேரை கைது செய்து தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

<<<<<<<>>>>>>

அமெரிக்காவின் ஃப்ளோரிடாவில் உள்ள கோல்ஃப் கிளப் ஒன்றில் நேற்றிரவு துப்பாக்கிச்சூடு சத்தம் கேட்டதாகவும், தாம் பாதுகாப்பாக இருப்பதாகவும் அந்நாட்டின் முன்னாள் அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

திரு ட்ரம்ப், அந்த கோல்ஃப் மைதானத்தில் இருந்தபோது துப்பாக்கிச்சூடு சத்தம் கேட்டதாக அவரது தேர்தல் பிரச்சார தகவல் தொடர்பு இயக்குனர் திரு ஸ்டீபன் சியூம் கூறினார்.

இந்த துப்பாக்கிச்சூடு சம்பவம் குறித்து அதிபர் திரு ஜோ பைடன், துணை அதிபர் திருமதி கமலா ஹாரீஸ் ஆகியோருக்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

திரு ட்ரம்ப் பாதுகாப்பாக இருப்பதை அறிந்து அதிபரும், துணை அதிபரும் நிம்மதி அடைந்துள்ளதாகவும், திரு ட்ரம்புக்கு தேவையான பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிச்சூடு சம்பவம் நடைபெற்ற இடத்தில் இருந்து ஒரு ஆயுதம் கண்டெடுக்கப்பட்டதோடு, துப்பாக்கியால் சுட்டவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

வங்கக்கடலில் உருவாகியுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, பீகார், ஜார்கண்ட், ஒடிஷா மற்றும் சத்தீஸ்கர் மாநிலங்களில் இன்று கனமழை பெய்யும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்கு வங்க கரையையொட்டி உருவாகியுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி, மேற்கு – வடமேற்கு நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது.

இது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறி, பின்னர் வலுவிழந்து அடுத்த 48 மணிநேரத்தில் ஜார்கண்ட் மற்றும் சத்தீஸ்கர் மாநிலங்களையொட்டி வடமேற்கு திசையில் நகரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, நேற்று ஜார்கண்ட், மேற்குவங்கம், ஒடிஷாவின் வடக்கு பகுதியில் பலத்த மழை பெய்தது.

இந்நிலையில், நாட்டின் வடகிழக்கு பகுதியில் மத்தியப்பிரதேசம், கொங்கன், கோவா பகுதிகளில் லேசானது முதல், மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அடுத்த ஆறு நாட்களுக்கு விதர்பா, மத்திய மகாராஷ்ட்ரா, மராத்வாடா, குஜராத் மற்றும் உத்தரப்பிரதேசம் ஆகிய இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

செஸ் ஒலிம்பியாட் போட்டியில், இந்திய ஆடவர் அணி - அஜர்பைஜானுக்கு எதிரான ஆட்டத்தில் 3-1 என்ற கணக்கில் வெற்றிபெற்றது.

ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்டில் நடைபெற்றுவரும், இப்போட்டியில், மகளிர் பிரிவு ஐந்தாவது சுற்றில் இந்தியா — கஜகஸ்தானை வென்றது.

ஓபன் பிரிவில் இந்திய வீரர் குகேஷ் எளிதாக வெற்றிபெற்றார்.

அஜர்பைஜானின் **Nijat Abasov** –க்கு எதிரான ஆட்டத்தில், இந்தியாவின் பிரக்யானந்தா வெற்றிபெற்றார்.

அதேநேரத்தில், இந்தியாவின் விதித் குஜராத்தி வெற்றி வாய்ப்பை தவறவிட்டார்.

மகளிர் பிரிவில் வைஷாலி வெற்றிபெற்றார்.

செஸ் ஒலிம்பியாட்டில் இன்னும் ஆறு சுற்றுப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

-----------------

ஆசிய சாம்பியன் கோப்பை ஹாக்கி போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று தென்கொரியாவை எதிர்கொள்கிறது.

சீனாவின் **Hulunbuir**-ல் இப்போட்டி இந்திய நேரப்படி மாலை மணி 3.30-க்கு தொடங்க உள்ளது.

ஆசிய சாம்பியன் கோப்பை ஹாக்கி போட்டியில் ஒரு போட்டியில் கூட தோல்வியடையாத இந்தியா, சீனா, ஜப்பான், மலேசியா, கொரியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளை வென்றது.

மற்றொரு அரையிறுதியில் பாகிஸ்தான் - சீனாவை எதிர்கொள்கிறது.

-----------------

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப் அணி 2-1 என்ற கோல் கணக்கில் கேரளா அணியை வென்றது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் முகமதன் ஸ்போர்ட்ஸ் கிளப் அணி – ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியை எதிர்கொள்கிறது.

<<<<<<<>>>>>>